# *DEPOSITION OF WITNESS*
# IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, THANJAVUR AT KUMBAKONAM

## CC No.149/2025

**PW: 2**

| | | | |
|---|---|---|---|
| Name : | திரு.மோகன் | Taluk : | கும்பகோணம் |
| Father's Name : | திரு. ரெங்கநாதன் | Calling : | LW2 |
| Village : | கும்பகோணம் | Age : | 44 |

Solemnly affirmed by Thiru.X.Gilbert Maria Julian, Bench Clerk Grade II in accordance with the provisions of The Oaths Act, 1969 (Act 44 of 1969) on the 03rd day of March 2026.

Signature of Witness.

(Accused Present. Additional Public Prosecutor Present. Defence counsel present)

முதல் விசாரணை :

நான் கும்பகோணத்தில் வசித்து வருகிறேன். 20.01.2025 அன்று 11.00 மணியிலிருந்து 12.00 மணிக்குள் விபத்து நடந்ததாக எனது அண்ணன் ராஜாராம் எனது அம்மாவிற்கு உடம்பு சரியில்லை கும்பகோணம் சுகம் மருத்துவமனைக்கு போய் பார் என்று போனில் தகவல் சொன்னார். நான் வேலை நிமித்தமாக வெளியில் இருந்தேன். அதன்பிறகு சுகம் மருத்துவமனைக்கு சென்று ICU பிரிவில் பார்த்தேன். ரொம்ப சீரியசாக உள்ளது என்று கூறினார்கள், அதன்பிறகு திருச்சி காவேரி மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம். அங்கே பார்க்க முடியாது என்று கூறிவிட்டார்கள். அதன்பிறகு 21.01.2025 விடியற்காலையில் இறந்து விட்டார். சம்பவத்தை பற்றி நான் விசாரித்தபோது என்னுடைய சித்தி மாலா சாலையை கடக்கும்போது பல்சர் வாகனத்தில் வந்த ஒருவர் மோதிவிட்டதாக கூறினார்கள்.

போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :

வட்டிப்பிள்ளையார்கோயில் சாலை என்பது கும்பகோணத்திலிருந்து மயிலாடுதுறை செல்லும் கிழக்கு மேற்கான சாலை என்றால் சரிதான். இறந்து போனவரின் வீடு ரோட்டின் வடபுறத்தில் உள்ளது என்றால் சரிதான். கோயில் ரோட்டின் தென்பகுதியில் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரித்தபோது தற்போது முன்விசாரணையில் சொன்ன விவரங்களை தான் கூறியுள்ளேன் என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

*Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him to be Correct.*

*Sd/S.Mahalakshmi,*
*Chief Judicial Magistrate,*
*Thanjavur at Kumbakonam*